4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை

சாட்சியின் சாட்சியம் **திரு.M.நம்பிராஜன்,பி.ஏ.,பி.எல்.,** 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

**அ.வ.எண். 17/2021** **நாள்: 11.02.2026** **வா.சா.1 –கவிதா**

**சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி -**

நானும் எனது கணவரும் திருமணமானது முதல் ஒற்றுமையாக ஒன்றாக தற்போது வரை வசித்து வருகிறோம் என்றால் சரிதான். நான் நீதிமன்றத்திற்கு வரும் போது எல்லாம் எனது கணவருடன் தான் வருவேன் என்றால் சரிதான். எனது குடும்பத்தில் நடக்கும் வரவு செலவு அனைத்தும் எனது கணவருக்கு மட்டும் தான் தெரியும் என்றால் சரியல்ல, எனக்கும் தெரியும். எனது கணவர், இந்த வழக்கு பிரதிவாதியுடன் பணம் கொடுத்த வகையில் பிரதிவாதியின் தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட வீட்டை பொறுத்து ஒரு கிரைய ஒப்பந்தத்தை ஏற்படுத்தி கொண்ட விவரம் எனக்கு ஞாபகம் இல்லை. மேற்படி ஒப்பந்தம் சம்பந்தமாக பிரதிவாதியின் தகப்பனார் மீது எனது கணவர் இந்நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.6/2021 ல் நிலுவையில் உள்ளது என்றால் சாட்சி அது பற்றி ஞாபகம் இல்லை என்று கூறுகிறார். நான் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கில் பிரதிவாதி எதிர்வழக்குரையில் என்ன சங்கதி சொல்லியுள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியாது, எனது கணவருக்கு தான் தெரியும் என்றால் சரிதான். இந்த வழக்கில் நான் சாட்சியம் அளிக்க தான் நீதிமன்றத்திற்கு வந்துள்ளேன், மற்ற விவரங்களை எனது கணவர் தான் பார்த்து கொள்வார் என்றால் சரிதான். இந்த வழக்கை எந்த வருடம் தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் 2019 வருடம் தாக்கல் செய்துள்ளதாக எனது கணவர் சொன்னார். இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக அறிவிப்பு அனுப்பினார்களா என்று எனக்கு ஞாபகம் இல்லை, எனது கணவருக்கு தான்

தெரியும். எனது வங்கி கணக்கில் எவ்வளவு பணம் உள்ளது என்று எனது கணவருக்கு தான் தெரியும் என்றால் சரிதான். எனது கணவருக்கு பிரதிவாதியின் தந்தை பணம் வாங்கியது சம்பந்தமாக எழுதி கொடுத்த ஆவணம் பற்றி பதிவு செய்த அன்றே எனக்கு தெரியும். பிரதிவாதியின் தந்தை மேற்படி வாங்கிய கடனுக்கு இதுவரை வட்டி செலுத்தவில்லை என்றால் சரிதான். பிரதிவாதியிடமும், அவரது தந்தையாரிடமும், எழுதப்படாத கடனுறுதி சீட்டில் கையொப்பம் வாங்கிய ஆவணங்கள் என்னிடம் உள்ளதா, எனது கணவரிடம் உள்ளதா என்றால் சாட்சி எனது கணவரிடம் தான் கேட்க வேண்டும் எனக்கு அது பற்றி தெரியாது என்று கூறுகிறார். தாவா சொத்தின் மதிப்பு எவ்வளவு என்ற விவரம் எனக்கு தெரியாது, எனது கணவருக்கு தான் தெரியும்.

**மேலும் குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

M NAMBIRAJAN

Digitally signed by M NAMBIRAJAN
Date: 2026.02.11 16:59:43 +0530

4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,

உடுமலைப்பேட்டை.